**செய்தி வெளியீடு எண் : 130** **நாள்: 19.01.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று (19.01.2022) சென்னை, அண்ணா நகர், 6வது அவென்யூவில் அமைந்துள்ள தொழிலாளர் குடியிருப்பு வளாகத்தில், 17 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு அரசாங்கத்தால் கட்டப்பட்டு வரும் புதிய தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் அவர்கள் ஆய்வு செய்தார்.

அப்போது தரமான கட்டுமான பொருட்கள் உள்ளதா, கட்டுமானப் பணிகள் எந்த அளவில் நடைபெற்று வருகிறது உள்ளிட்ட கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார், பின்பு இந்த கட்டுமான பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு ஆணையிட்டார்.

மேலும் தற்போது தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் ஆணையர் அலுவலகம், இந்தக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்தவுடன் சென்னை, அண்ணா நகர், 6வது அவென்யூவில் அமைந்துள்ள தொழிலாளர் குடியிருப்பு வளாகத்திற்கு மாற்றப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**